உ

கடவுள் துணை.

# ஜீவரத்தினம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதருஸ், என். இ.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என். இ.

103

கடவுள் துணை.

# ஜீ வ ர த் தி ன ம்.

## நேரிசைவெண்பா.

தன்னைத்தானுணராத தாரொளித்தமானிடருக்
கென்னத்தான்சொல்வே னெங்கோவே - உன்னைத்
தானென்பானாரோ தானாரோநீயாரோ
நானென்னும் பேரோ நவில்

## வி ரு த் த ம்.

மனிதரென்றால் திறமையுடன் பொறுமைவேண்டும்
மனிதரென்றால் மன்னுயிர்போல் கருணைவேண்டும்
மனிதரென்றால் பேச்சுநிலை யுறுதிவேண்டும்
மனிதரென்றால் மறைவிதிகள் மனத்தில்வேண்டும்
மனிதரென்றால் குருவாணை செலுத்தவேண்டும்
மனிதரென்றால் வுபகாரப் பெருமைவேண்டும்
மனிதரென்றா லித்தகையோர் மனிதராகும்
மற்றவரை மனிதரென்று மறைசொல்லாதே.

செய்தநன்றி மறவாதான் மனிதனாகும்
சொன்னசொல் தவறாதான் மனிதனாகும்

கைதவஞ்சற் றுள்ளவனே மனிதனகும்
கடவுளென்ற பயமுடையோன் மனிதனகும்
பொய்மொழியை நீற்றவனே மனிதனகும்
புண்ணியங்கள் பூத்தவனே மனிதனகும்
வையமிசை யடக்கமுளான் மனிதனகும்
வாய்மதத்தோர் மிருகமென வழுத்தலாமே.

சிவ - காயமேயிது பொய்யடா
காற்றடைந்த பையடா
மாயனார் குயவன்செய்த
மண்ணுபாண்டம் ஓடடா                                   சிவ காய
உப்புமண்ணும் ஒட்டைமூங்கில்
ஒட்டிவைத்த காடடா
உளுத்தநரம்பும் வெளுத்ததோலும்
இளுத்துக்கட்டிய கூடடா                                  சிவ காய
குப்பைகீரை முளைத்ததுபோல்
கூடுகட்டின காடடா
கொழுத்தநரம்பும் புழுத்ததோலும்
இழுத்துகட்டின கூடடா                                   சிவ காய
மனமேயிந்த காயமதில்
ஒன்பதோட்டை வாசடா
வெந்தசோறும் நொந்தகாய்கள்
போட்டடைத்த பையடா                                   சிவ காய
புனல்களுருங் கேணிடா
பொய்நிறைந்த விடடா

காலையில் குளியாவிட்டால்
நாத்தம்வீசும் ஓட்டா — சிவ காய

அஞ்சுபஞ்ச பூதமேயிதில்
அல்லும்பகலும் வாசமே
ஆறுகாடி துஷ்டபுலிகள்
போருசெய்யும் வாசலே — சிவ காய

பந்துபோல் குதித்திடுமிவர்
பாசமேயிவர் நேசமே
யெங்கள்குரு பாதம்போற்றி
யெடுத்துரைத்த காயமே — சிவ காய

அத்திமரத்தின் கனியைப்போல
ஆடுமேலொரு ஸ்தூலமே
தட்சணத்தில் வேடரான
தண்டெடுப்பது முன்னமே — சிவ காய

தஞ்சைநகரில் வாழுகின்ற
தவநிலையைப் பாருமே
தம்பிசிரி யேன்சொல்லை
அனைவருமே கேட்பீரே. — சிவ காய

## வி ரு த் த ம்.

இப்பவோபின்னையோ சற்றுநேரத்திலோ
இரவிதான் படுநேரமோ
யிரவிலோபகலிலோ உதயகாலத்திலோ
யெந்தந்த வேளைதனிலோ

அப்பிலோ தீயிலோ நாயிலோ பேயிலோ அரவுதான்பெரு
ஆறுதபுண்ணிலோ நடநோயிதன்னிலோ [மிடியிலோ
ஆயுதங் களினாலேயோ
செப்பரியவீட்டிலோ காட்டிலோயென்னுயிர்
பிரிந்திடும் நடராஜனே.

ஆனந்தக்களிப்பு.

மானிடமென்றுவந்தோரே மண்மேல்
எத்தனைநாளிருப்பீரோ சொல்வீரே மா
காணியுனக்குண்டுவேறே அற்ப
கனவுக்குநிகரான வாழ்வானதாலே
துணிவுகொண் டன்னியர்மேலே தினந்
தொந்தரைசெய்யாதே நரகம்பொய்யாதே மா
ஏழைவய ரெரிக்காதே கடவுள்
இட்டத்தின் மேலேபே ராசைகொள்ளாதே
பாழும்பணத்தை நம்பாதே நீ
பாடையில் போகையில் கூடவாரதே மா
ஏழுமதில்பத்து சிரசும் கொண்ட
ராவணன்செங்கோல் அவனுடை யரசும்
தாழாமல்நின்று தாவரையும் வீணாய்
தானென்று துள்ளாதே சீக்கிரமழியும் மா
கல்லாயிரும்பா உடம்பு கலி
யுகமட்டுமழியாத வரமுண்டோசொல்லு
புல்லாகிலும் உதவியுண்டு சுத்த
போராற்றள்ளவகைநீ நல்லவழி நில்லு மா

சூரியனும் நூறுபிறவி அவன்
துரைத்தனஞ் செங்கோலு முடியுமாகூறி
பெரியோர் மனம்நோகச்சீறி அவன்
பூண்டொழிந்தானே அனியாய பாவி மா

இரணியனென்றபேர் சொன்னால் வானோ
ரெல்லோரும்பணிவிடை செய்தாரே அன்னாள்
கெருவத்தை மேர்ப்பூண்டதினால் அவன்
கிழியுண்டொருக்ஷண காலத்தில் மாண்டான் மா

தெய்வமிருக்குதென் றெண்ணு உனக்கு
தீங்குசெய்வோர்க் குபகாரமே பண்ணு
பொய்மொழிவிஷமென்று எண்ணு உனக்கு
போஜனமிட்டோரை பூஜைகள் பண்ணு மா

ஆயிரத்தெட்டண்ட மொன்றாய் அந்த
ஆண்டசூரபத்ம னவனெங்கே நின்றான்
பாவியென்றநாமங் கொண்டோர் கெதியை
பாடினாலுந்தோஷந் துடருமே கண்டாய் மா

ஆசைக்கனேகஞ் சொல்லாதே கவை
யாணப்பிறகுநீ தோஷஞ்சொல் லாதே
மோசக்கருத்துக் கொள்ளாதே திரு
முன்னிருக்காமல் பறந்துபோ வானே மா

நீயேபிழைக்க வெண்ணாதே பிறர்க்கு
நேற்றுசொன்னசொல்லை மறந்துபோகாதே

நானேவீரனென் றெண்ணாதே நமக்கு
நடுவானகடவு ளழித்திடு வாரே மா

தன்னைத்தானே புகழாதே சற்றுந்
தாழ்ந்தவர்மீதினி யிழிவுசொல் லாதே
என்னால்பிழைத்தா னெண்ணாதே நம்
எல்லோர்க்குங்கடவு ளிருக்கிறார் மேலே மா

இழிவாக பிறரைச்சொல்லாதே கையில்
இருக்கும்பொருள்நம்பி கெர்வங் கொள்ளாதே
ஒழியாம லிருந்தவரில்லை அடடா
உனக்குமாத்திரமென்ன கெடுவுண்டா யில்லை மா

பிறர்தொழிலைக் கெடுக்காதே உன்
பெண்சாதி பிள்ளைபோல் அவனுக்குண்டே
அறநெறியை விடுக்காதே நம்ம
ஆண்டவன்கோபத்திற் காளாய்க் கெடாதே மா

மன்னாதி மன்னரையெல்லாம் இந்த
மண் ணுண்டு போச்சுதே உன்னுடல்பொன்னா
தன்னாலே யாவது என்ன கடவுள்
தன்செயலன்றி யறியுமோ அண்ணா மா

படிப்பவரெல்லாம் பெரியோர் இதின்
பயனறிந்தோரெல்லாம் மோட்சத்துக் குரியோர்
தடுப்பவரெல்லாங் கெடுவோர் உடலை
தன்னைமலைத்தபேர் நரகத்துக் குடையோர் மா

## விருத்தம்.

பணந்தேடி யாரிருந்தார் உலகமீதில்
பாவிதிரி யோதிரனும் பாட்டனாரும்
குணமான துரோணரவர் கருணன்பூரி
சூறியமீதார் தேத்தரசன் சகுனிசல்லி
பிணமானார் அர்ச்சுனன்கை அம்பினாலே
பெண்டீரும் பணங்காசும் பிறகேபோச்சோ
மணமான வாழ்வுபொருள் ஆடுமாடும்
மாய்கையடா பொம்மலாட்ட மதித்துபாரே.

## ஆனந்தக்களிப்பு.

உன்னையே நீயெண்ணிப்பாரு இந்த
உலகத்திலெதுசொந்தம் யோசித்துக்கூறு உன்

அன்னைக்கருவிந்து நாதம் கொண்டு
ஆடுமுடலுக்கு மண்ணென்ன பேதம்
பின்னைவளர்த்திடுஞ் சாதம் யிடை
பின்கலைசுவாசம் தடைபட்டால் மோசம் உன்

தாயுந்தகப்ப னிரவல் அன்று
தாலிகட்டிக்கொண்ட பெண்டீரு மிரவல்
சேயும்பொருளு மிரவல் மற்ற
ஜெகமெட்டுதிக்குஞ் செங்கோலு மிரவல் உன்

சோலையும்வாவியு மிரவல் நல்ல
சொகுசானகட்டட மாளிகை யிரவல்

மேலேவெகுபூச்சு மிரவல் ஜீவா
மெத்தவதிகார உத்யோக மிரவல் உன்

அண்ணனுந் தம்பியிரவல் உந்தன்
ஆசைக்கொழுந்தியு மாமி யிரவல்
கண்ணுக்கு புருவமிரவல் உந்தன்
கையில்பவுத்திர மோதிர மிரவல் உன்

பெட்டியும் பேழையிரவல் பிறர்
காணுமல்சேர்க்கும் பணமு மிரவல்
கட்டிய சோமனிரவல் நாளை
கட்டிக்கொண்டுபோகும் பாடை யிரவல் உன்

தோப்புந் தடாகமிரவல் உனக்கு
துரைத்தனத்தார்தந்த மானிய மிரவல்
காப்புகொலுசு மிரவல் நாளை
காஷ்டத்திலெண்சா ணிடமு மிரவல் உன்

பாயுந்தலேயணே யிரவல் நல்ல
பட்டுப்பட்டாவளி சேலே யிரவல்
தோயுஞ்சுகந்த மிரவல் தினம்
தோத்திரஞ்செய்திடு மந்திர மிரவல் உன்

தாலிச்சரடு மிரவல் தீட்டும்
தலேக்கெண்ணே சாந்துமை பொட்டுமிரவல்
மாலேச்சரடு மிரவல் தீட்டு
மஞ்சளுங்குங்குமந் தானு மிரவல் உன்

தங்ககைகயு மிரவல் தரை
தன்னிற்புதைத்த புதையு மிரவல்
செங்கைவளையு மிரவல் தந்த
சிப்புசிக்கங்கோல் சவுரி யிரவல் உன்

பஞ்சணைமெத்தை யிரவல் தந்த
பாழாணகட்டைக்கு வாசனை யிரவல்
மிஞ்சியவரைஞா ணிரவல் மெத்த
மினுக்குக்கடுக்க னுடுப்பு மிரவல் உன்

தண்டைசதங்கை யிரவல் மற்ற
தாவடம்வாசனை பூவட மிரவல்
கொண்டை மினுக்கு மிரவல்
கூட்டிக்கொண்டு போகும் சங்குமிரவல் உன்

ஜீவானந்தக்களிப்பு - முற்றிற்று.

---

இ-ம்-இந்துஸ்தானி-ஏகதாளம்.

பல்லவி.

மலைத்துமலைத்துடலை மதிக்கிறாய்நெஞ்சே
மதியமுதுண்டவன்போல் களிக்கிறாய்பஞ்சே.

அநுபல்லவி.

சிலையாயிரும்பு செம்பாவுன்னுடம்பு
சீச்சியிருகலையின் காற்றடங்கினால்வம்பு
வலைபோல்வுடலெங்கும் வழிசிறுநரம்பு

### சரணங்கள்.

வைத்துப்பின்னியசொத்தை　　கட்டைக்காகவாதெம்பு
கட்டுமரத்தைநம்பி　　கடலிழந்தவன்போல்
கலக்குதேபிராணனுன்னுள் காற்றின் துரும்பைப்போல்
கெட்டுப்போகாதேசொன்னேன்　　கெடுவிலேமனமே

கிடத்திக்கொளுத்துமுன்னே　　கழிக்காதேவிண்ணுளே
காமாதியசுகத்தில்　　கடக்கிறாய்தினத்தை
காலன் தினமெடுத்து　　பார்க்கிறான்கணக்கை
தாமதித்திருக்காதே　　தன்னுதென்றுமனத்தை

தையலர்க்கிடுசரக்　　காயிந்தபிணத்தை
பணம்பொருளால்நியுன்　　பாதைவாராது
பாவபுண்யக்கலை　　மட்டும்விடாது
பிணமாகும்போதுயிரைப்　　பிடிப்பவரேது

பிள்ளையெனுஞ்சுடலே　　தாண்டிவராது
அருணையம்பதிவளர்　　அற்புதஜோதி
அயன்மால்தேடிடுங்　　கரையிலாவாதி
அகிலத்தோர்க்கெவ்வித　　மேலந்தசோதி

### இ-ம்-கண்ணிகள்.

ஆக்கையுன்னுதோ அல்லவென்றால்
ஆவியுன்னுதோ
ஆக்கையென்னுதென்று யாருஞ்சொல்லவில்லை
காக்கைகழுநரி காக்கின்றதேதொல்லை　　ஆக்

புத்ருன்னுதோ பலபலவாம்
பொருள்களுன்னுதோ

புத்ரரென்னுதென்று புகழ்ந்திருக்குங்காலே
சுத்திகுடமுடைத் தோடுவதேவேளை ஆக்

வீடுமுன்னுதோ தேடும்பொருள்
விருது முன்னுதோ

வீடுமுன்னுதென்று வீம்பேணிப்பொய்நாட்டில்
கூடும்ஜெனம்நாளை கொளுத்துஞ்சுடுகாட்டில் ஆக்

இன்னஞ்சொல்லவோ உன்னிலேதான்
உணரவில்லையோ

பன்னுந்தமிழ்பா வலர்களாடிப்பாடி
இன்னுஞ்சிறுவன் இயம்பியசொற்படி ஆக்

## தெலுங்கு கீர்த்தனை.

உத்தகிரா யித்திரேகம் மன
ஊரிகிராரா போதாம்
தாரிலோபல தையாலுன்னதி
தாடுகராரா தீடுகபோதாம் உத்

சக்திமாயலசேதா மன
சீதாராமுனி காதா
என்னடிகன்ன பொய்யேதென்ன
சக்ககரார சிக்கிதசாமி உத்

ஆலிபில்ல லெவரு வா
ரெவ்வருரு மனக்கு
அங்கடிபோதிமி தொங்கடிதெஸ்திமி
தொங்கலுவொச்சி தோசுகபொய்யதி உத்

கோடகோடகோடா கன
ரங்கடுநிலசின கோடா
வச்சிரதேகமு இச்சிரிதானமு
வெச்சிரிநீயொர தாரகனுமமு உத்

ஜீவரத்தின முற்றிற்று.

---

## பட்டினத்தார் உடற்கூற்றுவண்ணம்.

தனதனதான தனதன தான
தந்தன தந்தன தந்தன தந்தன
தனனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதந்த—
தந்ததனதான தனதானனு.

ஒருமடமாது மொருவனுமாகி
யின்பசுகந்தரு மன்புபொருந்தி
யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
வூறுசுரோணித மீதுகலந்து—
பனியிலோர்பாதி சிறுதுளிமாது
பண்டியில்வந்து புகுந்துதிரண்டு

பதுமவரும்பு கபடமிதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற—
உருவமுமாகி யுயிர்வளர்மாத
மொன்பதுமொன்று நிறைந்துமடந்தை
யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து—
மகளிர்கள்சேனை தரவணையாடை
மண்படவுந்தியு தைந்துகவிழ்ந்து
மடமயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து—
ஒளிநகையூற விதழ்மடவாரும்
வந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்ப—
உடைமணியாடை யரைவடமாட
வுண்பவர்தின்பவர் தங்களோடுண்டு
தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரோ டோடிநடந்து—
அஞ்சுவயதாகி விளையாடியே ()
உயர்தருஞான குருவுபதேச
முத்தமிழின்கலை யுங்கரைகண்டு
வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறு பிராயமும்வந்து—

மயிர்முடிகோதி யறுபதநீல
    வண்டயிர்தண்டொடை கொண்டைபுனைந்து
மணிபொனிலங்கு பணிகளணிந்து
    மாகதர்போகதர் கூடிவணங்க—
மதனசொரூப னிவனெனமோக
    மங்கையர்கண்டு மருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
    மாமயில்போலவர் போவதுகண்டு—
மணமதுபொரும லவர்பிறகோடி
    மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி யிதழமுதுண்டு
    தேடியமாமுதல் சேரவழங்கி—
ஒருமுதலாகி முதுபொருளாயி
    ருந்ததனங்களும் வம்பிலிழந்து
மதனசுகந்த விதனமிதென்று
    வாலிபகோலமும் வேறுபிரிந்து—
வளமையுமாறி யிளமையுமாறி
    வன்பல்விழுந்திரு கண்களிருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
    வாதவிரோதகு ரோதமடைந்து—
        செங்கையினிலோர் தடியுமாகியே. ()

வருவதுபோவ தொருமுதுகூனு
    மந்தியெனும்படி குந்திநடந்து

மதியுமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமன்மொழிந்து—
துயில்வருநேர மிருமல்பொருது
தொண்டையுநெஞ்சமு லர்ந்துவரண்டு
துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர்பாலாகள் கோரணிகொண்டு—
கலியுகமீதி லிவர்மரியாதை
கண்டிடுமென்பவர் சஞ்சலமிஞ்ச
கலகலவென்று மலஜலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து—
தெளிவுமிராம லுரைதடுமாறி
சிந்தையுநெஞ்சமு லைந்துமருண்டு
திடமுமலைந்து மிகவுமலைந்து
தேரினலாதர வேதெனநொந்து—
மறையவன்வேத னெழுதியவாறு
வந்ததுகண்டமு மென்றுநெளிந்து
இனியெனகண்ட மினியெனதொந்த
மேதினிவாழ்வுநி லாதினிநின்ற—
கடன்முறைபேசு மெனவுரைநாவு
றங்கிவிழுந்துகை கொண்டுமொழிந்து
கடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலு சுவாசமுநின்று—
நெஞ்சுதடுமாறி வருநேரமே. ()